REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 26 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 307 | December 26,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

மாத்தறை மாவட்டத்தில் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில்

மாத்தறை மாவட்டத்தின் சில பகுதிகளில் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி மாத்தறை – திக்வெல்ல – யோனக்க புர கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளே தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார். 06

கொரோனா தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டு வருவதை துரிதப்படுத்துவது அவசியம்



சுகாதார துறையினருடன் விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை - ஜனாதிபதி

கொவிட்19 தடுப்பூசி இலங்கைக்கு கொண்டுவரப்படுவதை விரைவுபடுத்த வேண்டியது அவசியமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா உள்ளிட்ட பல நாடுகளில் கொவிட் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த தடுப்பூசிகள் பற்றி விரிவாக ஆராய்ந்ததன் பின்னர், குறித்த நாடுகள் மற்றும் இலங்கையின் சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க எனது தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்கவை நியமித்துள்ளேன்.

தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய மக்கள் குழுக்கள் தொடர்பாக அவர்களது தேவை 06

எரிப்பதா?புதைப்பதா? என்பது சுகாதார பிரிவின் முடிவில்

முஸ்லிம்களின் உடல்கள் தகனம் தற்போது அரசியலாக்கப்பட்டுள்ளது

அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் எதிரணி

கொவிட்19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடலை தகனம் செய்யும் விவகாரத்தை வைத்து எதிர்க்கட்சியினர் [illegible]

றார்கள். வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்யலாம் என சுகாதார தரப்பினர் குறிப்பிட்டால் அதனை செயற்படுத்த பின்வாங்கமாட்டோம் என ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி ,தேசிய மருத்துவ மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று 06

கொரோனா வைரஸ் காரணமாக

கட்டுநாயக்க நிலையம் இன்று திறப்பு

CLICK

ரஷ்யாவிலிருந்து சுற்றுலா பயணிகள் குழு முதலாவதாக இன்று வருகை

கொரோனா வைரஸ் காரணமாக உள் வருகைக்காக மூடப்பட்டுள்ள கட்டுநாயக்க விமான நிலையம் இன்று திறக்கப்படுகிறது.

ரஷ்யாவின் மொஸ்கோவ் நகரத்தில் இருந்து சுற்றுலா பயணிகள் குழுவினர் இன்று கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தருகின்றனர்.

எனினும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக திறக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படாதென கட்டுநாயக்க விமான நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய விமான சேவையான ஏரொப்ளொட் விமான சேவையின் விமானம் ஒன்றில் அந்த நாட்டைச் சேர்ந்த 200சுற்றுலாப்பயணிகளைஇலங்கைவருகின்றனர்.

எனினும் ஐரோப்பா முழுவதும் பரவும் கொரோனா வைரஸ் தொற்றின் புதிய திரிபினால் விமான பயணங்களை இரத்து செய்துள்ளதாக விமான நிலைய தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.எனினும் 200 ரஷ்ய பயணிகளும் மேலும் சில நாட்களின் பின்னர் இலங்கை வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என விமான நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

200 நீதிபதிகள் இருக்க வேண்டிய இடத்தில் கடமையில் 15 பேரே

இதனாலேயே நாட்டில் வழக்குகள் தேக்கம்

ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 15 நீதிபதிகள் என்ற அளவிலே நீதிபதிகள் உள்ளனர். உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு சுமார் 200 நீதிபதிகள் என்ற ரீதியில் இருப்பதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். காலியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நீதிமன்ற வளாகத்தை பார்வையிடச் சென்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் 06

ஆழிப்பேரலையின் 16ஆவது நினைவுதினம் இன்று

வி.ரி.சகாதேவராஜா

உலகை உலுக்கிய சுனாமி பேரனர்த்தம் இடம்பெற்று இன்றுடன் 16வருடமாகின்றது. 2004 டிசம்பர் 26ஆம் திகதி இலங்கை வரலாற்றில் ஒரு மறக்கமுடியாத நாள்.

அதனை முன்னிட்டு இன்று இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் சுனாமி நினைவுதின நிகழ்வுகள் சுகாதார நெறிமுறைக் கிணங்க பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த சோகதின நிகழ்வுகள் 06

ஜனாஸா எரிப்புக்கு எதிராக நேற்றும் பல ஆர்ப்பாட்டங்கள்

கொவிட் 19 வைரஸ் தொற்றினால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதைக் கண்டித்து நேற்றும் அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.

ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதை கண்டித்து கல்முனையில் ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம். எஸ் அப்துர் ரஸ்ஸாக் தலைமையில் இடம்பெற்ற அமைதி 06

கொரோனா வைரஸ் மருந்து;

நாட்டுக்கு விரைவாக எடுத்து வருவது அவசியம்

மருத்துவ நிபுணர்குழு வேண்டுகோள்

கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளை இறக்குமதி செய்வதை துரிதப்படுத்துமாறு நிபுணர்கள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் மருந்துகளை இலங்கைக்கு கொண்டுவருவது குறித்து ஆராய்வதற்காக கொரோனா வைரஸ் விவகாரங்களிற்கான இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே நியமித்த குழுவினரே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டுள்ள மருந்துகளே கொரோனா வைரஸினை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தற்போதுள்ள ஒரேயொரு வழி என்பதால் மருந்துகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டும் என நிபுணர்கள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. 06

நத்தார் தின ஆராதனை நேற்று (25) பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் கந்தானையிலுள்ள புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடத்தப்பட்ட போது...
(படங்கள்: சுலோச்சன கமகே)

ஜனவரி முதலாம் திகதி திரையரங்குகள் திறப்பு

25 % இருக்கைக்கே அனுமதி

நாடு முழுவதுமுள்ள திரையரங்குகள் வரையறுக்கப்பட்ட ஆசனங்களுடன் ஜனவரி முதலாம் திகதி முதல் [illegible]

இஸ்ரேல் அரசினால் இரண்டு வென்டிலேட்டர்கள் நன்கொடை

சுகாதார அமைச்சு செயலாளரிடம் கையளிப்பு

இஸ்ரேல் அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டு வென்டிலேட்டர்கள் வெளிவிவ[illegible]

PCR சோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டதும்

தப்பிச் சென்ற கொரோனா தொற்றாளர்கள் விரட்டி பிடிப்பு

சிலாபத்தில் பொலிஸாரால் கைது

நீர்கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் நிர்மாணப் பணிகளுக்காக மட்டக்களப்பில் இருந்து வந்த [illegible]

கல்கிஸ்ஸயில் விபசார விடுதி சுற்றிவளைப்பு

9 பெண்கள் உட்பட 11 பேர் கைது

கல்கிஸ்ஸயில் மசாஜ் சிகிச்சை நிலையம் என்ற போர்[illegible]